சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 24.02.2026 SC. 97/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யாவு | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 5 | | | |

---

முதல் விசாரணை

நான் சின்னமனூரில், டோபி காலனி தெருவில் குடியிருந்து வருகிறேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ–3 ஆகும். வழக்கை பற்றி என்ன எழுதியிருந்து பற்றி எனக்கு தெரியாது.

**(சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி விட்டதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)**

குறுக்கு விசாரணை

கடந்த 07.05.2015ம் தேதி காலை 9.45 மணிக்கு நான் வேலைக்கு செல்லாததால், வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது சின்னமனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் என் வீட்டிற்கு அருகிலுள்ள அரசன் வீட்டு வெளிபுற மேற்கு பக்கம் கிடுகு படல் தட்டி எரிந்தது சம்பந்தமாக என் முன்பாகவும், எங்கள் காலனியை சேர்ந்த கருப்பையா முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து பிறழ்சாட்சியாக மாறிவிட்டேன் என்றால் சரியல்ல.

(ஒம்).M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்